தொகுதி-9 எண் 1
Vol. 9 No. 1

மார்கழி 2051 - பங்குனி 2052
January - March 2021

ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. Aranga. Pari*

*Editorial Board*
*Dr. S. Rajaram*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. P. Velmurugan*
*Dr. A. Rameez*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. R. Tamilselvan*
*Dr. S. Ramesh*
*Dr. S. Thangamani*
*Dr. Vaani Arivalan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Thamizh Journal)

*Published by*
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

27

Scanned with CamScanner

# கம்பரின் எதிர்காலவியல் சிந்தனைகள்

முனைவர் இரா. முரளி கிருட்டினன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் எப்போது சேமிக்கத் தொடங்கினானோ அப்பொழுதே எதிர்காலம் பற்றிய கருத்தாக்கம் தோற்றம் பெற்றது. இன்றைய நவீன உலகில் வளர்ந்த வருகின்ற துறையாகத் திகழ்கின்ற எதிர்காலவியல் பற்றிய சிந்தனை தமிழ் இலக்கியங்களில் தொடக்க காலம் முதலே இடம்பெற்று வந்துள்ளன. புராண இதிகாசங்களில் காணப்படுகின்ற இக்கூறுகளை வெளிப்படுத்தும் விதமாக கம்பரின் எதிர்காலச் சிந்தனைகளை ஆராய்வதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள்**

விக்கிபீடியா, ஃப்யூச்சராலஜி - எதிர்காலவியல், Future Studies- எதிர்கால கல்வி

**முன்னுரை**

முக்காலங்களில் சிறப்படையது எதிர்காலம். இன்றைய காலத்தில் நின்றுகொண்டு, நேற்றைய காலங்களில் நடந்த தவறுகளைத் திருத்திக்கொண்டு நாளைய காலத்தை வளமாக அமைத்துக்கொள்ள வாய்ப்பிருப்பதால் எதிர்காலம் நம்பிக்கைக்குரிய காலமாக விளங்குகின்றது. எதிர்காலத்தில் நிகழ உள்ள, நிகழவேண்டிய நடப்புகளை இன்றைக்கு அல்லது நேற்றைக்குச் சொல்லுவது என்பது எதிர்காலவியல் ஆகின்றது. **"வரலாறு தற்கால மாற்றங்களின் போக்குக்கள், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி நிலைகள் போன்ற பல அம்சங்களின் துணையுடன் எதிர்காலத்தை நோக்கி பகுப்பாய்வது, வருவதுரைப்பது எதிர்காலவியல் (Future Studies) ஆகும்"[1]** என்று எதிர்காலவியலுக்கான வரையறையைத் தருகின்றது விக்கிப்பீடியா. அறிவியல், சமுதாயம் போன்றவற்றில் தகுதி மிக்க வளர்ச்சிகளை எடுத்துரைப்பது எதிர்காலவியல் ஆகின்றது.

**எதிர்காலவியல் - சொல்லாக்கம்**

ஃப்யூச்சராலஜி என்னும் சொல் அண்மைக்காலத்தில் மிக அதிகமாக வழங்கி வருவதற்குக் காரணம், அது இன்றியமையாத ஓர் அறிவியல் துறையாக இன்று உருவாகியிருப்பதே ஆகும். எதிர்காலவியல் என்றாலே எதிர்காலம் பற்றிச் சிந்திப்பது என்று பொருள் கொள்ளப்படுகிறது. "எதிர்காலவியல் (Futurology) எனும் சொல்லாட்சியை முதன் முதல் 1943இல் உருவாக்கியவர் ஃப்லெச்தீம் (Flectheim) என்ற அறிஞர்."[2]. இவர் செருமன் நாட்டைச் சேர்ந்தவர்.

**எதிாகாலவியல் - சொல்விளக்கம்**

எதிர்காலம் என்பதற்கு 'வருங்காலம்'[3] எனத் செந்தமிழ் மொழியகராதி விளக்கம் தருகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, எதிர்காலம் என்பதற்கு,

1. "(நிகழ்காலத்தைத் தொடர்ந்து) இனி வரும் காலம், இன்று என்பது நிகழ்காலம், நாளை என்பது எதிர்காலம்,
2. (நிகழ்காலத்தைக் கடந்து) நிலைத்து நிற்கக் கூடிய வளர்ச்சி"[4]

எனப் பல விளக்கங்களைத் தருகிறது.

"இன்றைய செயல்பாடுகளின் நாளைய விளைவுகளைக் கணித்துரைப்பது: நாளைய எதிர்பார்ப்பிற்கேற்ப இன்றைய செயல்களைத் திட்டமிடுவது எதிர்காலவியல்"[5] என்னும் ச.சிவகாமியின் கருத்து எதிர்காலம் என்பதற்கான தெளிவான விளக்கமாக அமைகிறது

கம்பராமாயணம் தொன்மை வாய்ந்த கதையாகும். இக்கதையை வடமொழியில் இருந்து மீட்டு எடுத்துத் தமிழில் தன்னிகரற்ற காப்பியமாகக்



Scanned with CamScanner

கம்பர் படைக்கின்றார். கம்பர் காலத்தில் இருந்து இதனைக் கண்ணுறும்போது கம்பரின் காலம் நிகழ்காலம் ஆகும். இராமாயணக்காலம் கடந்த காலம் ஆகும். கம்பராமாயணம் தற்போது ஆராயப்படும் அல்லது படிக்கப்படும் காலத்தில் அது எதிர்காலத்திற்கும் பொருந்துவதாகப் படைக்கப்பெற்றிருக்கிறது. பற்பல புதிய துறைகளில் கம்பர் தன் கருத்துகளைப் பதிவு செய்திருப்பது கருதி எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் கம்பர் தன் காப்பியத்தைப் படைத்துள்ளார்.

### எதிர்கால ஆட்சி பற்றி கருத்தாக்கம்

கம்பராமாயணத்தில் இராமனுக்கு முடிசூட்டுவிழா நடைபெறப் போகிற சூழலில் எதிர்காலத்தில் அமையவிருக்கும் ஆட்சியைப் பற்றியும் அது நடைபெறவேண்டிய நெறிகள் பற்றியும் வசிட்டரின் மூலம் எடுத்துரைக்கிறார். இதனைத் தொடர்ந்து இராமன் கிட்கிந்தை அரசைப் பெற்று அதனை சுக்கிரீவனிடத்தில் ஒப்படைக்கின்றபோதும் எதிர்காலச் சிந்தனைகள் பொருந்திய அரசினைச் சமுதாயத்தைப் படைக்க எடுத்துக்கொண்ட முயற்சி தெரியவருகின்றது. அதுபோன்று வீடணனுக்கு அரசை அளிக்கின்ற போதும் எதிர்காலத்தில் இலங்கையில் நல்லாட்சி நடைபெறவேண்டும் என்ற எண்ணத்துடன் இராமன் செயல்படுவதாகக் கம்பர் காட்டுகின்றார். இந்த மூன்று அரசியல் சூழல்கள் மிக முக்கியமானவை இவற்றை ஒருங்கிணைத்துப் பார்த்தால் கம்பரின் எதிர்காலம் பற்றிய கருத்தாக்கம் இவை என்பதை உணர்ந்து கொள்ள இயலும்.

இந்த மூன்று சூழல்களிலும் அரசிற்கு அனுபவம் இல்லாத புதியவர்கள் அரசுரிமை ஏற்க வருகிறார்கள் என்பது கவனிக்கத்தக்க ஒன்று. அதாவது இராமன், சுக்கிரீவன், வீடணன் ஆகிய மூவரும் முதன் முறையாக அரச பதவி ஏற்கப் போகிறார்கள். புதியவர்களாக உள்ள இவர்களிடம் அரசியல், ஆட்சியியல் ஆகியவற்றை ஒப்படைக்கும்போது பழைய குறைகள் களையப்பட வேண்டும் என்று கம்பர் எண்ணுகிறார். புதியதோர் உலகைப் படைக்கப் புதியவர்கள் மிகத் தகுதியானவர்கள் என்பது இங்குக் கருதத்தக்கது. மேலும் இம்மூன்று சூழல்களிலும் மூவகை வேறுபாடுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இராமன் என்ற புதியவருக்கு அரசு நாளை என்று அமைந்தபோது அது அடையப்படாமல் கதை நகர்கிறது. வீடணனுக்கு உரிமை என்பது இலங்கை அரசனாக இராவணன் இருக்கும்போதே ஏற்படுத்தப் பட்டுவிடுகின்றது. சுக்ரீவனின் அரசு மட்டுமே முன் உள்ள அரசியலாளரான வாலி இறந்தபின் அந்த இடத்தை நிரப்புவதற்காக ஏற்படுத்தப்படுகிறது. இம்மூன்று அரசுகளை அமைக்கின்றபோது சுக்கிரீவனின் கிட்கிந்தை அரசு மட்டுமே உறுதி என்ற நோக்கத்தில் அமைந்தது என்பதை அறியவேண்டியுள்ளது. இராமனின் ஆட்சிக் கனவு கலைகின்றது. வீடணனின் ஆட்சி என்பது இராவணன் அரசனாக இருக்கும்போது மாற்று அரசாக உருவாக்கப்பெறுகிறது. இந்தச் சிற்சில வேறுபாடுகள் காரணமாக சுக்கிரீவனின் அரசினைச் செம்மைப்படுத்த இராமன் பற்பல கருத்துகளை மொழிய வேண்டியவராகக் கம்பர் படைத்துக் காட்டுகிறார்.

### எதிர்காலச் சமுதாயமும், அரசும்

எதிராகாலச் சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வசிட்டர் வழியாகக் கம்பர் எடுத்துரைக்கின்றார். இராமனுக்கு நாளை முடிசூட்டுவிழா என்ற நிலையில் வசிட்டர் நாளைக்கு அரசமைக்க உள்ள இராமனுக்குச் சில அறிவுரைகளைப் பகர்கின்றார். இவ்வறிவுரைகள் கம்பரின் எதிர்காலச் சிந்தனைகளை எடுத்தியம்புவனவாக இருக்கின்றன.

என்புதோல் உடையார்க்கும் இலார்க்கும் தாம்
வன் பகைப்புலன்மாசு அற மாய்ப்பது என்?
முன்பு பின்பு இன்றி மூவுலகத்தினும்
அன்பின் நல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ"
(மந்தரை சூழ்ச்சிப்படலம்-24)

என்ற பாடல் எதிர்காலவியல் சிந்தனை கொண்ட பாடலாகும். முக்காலம், பிற்காலமாகிய எதிர்காலம் ஆகிய எல்லா காலத்திலும் அன்பின் அடிப்படையில் சமுதாயம் அமையவேண்டும் என்ற விழைவினை இப்பாடல் பறை சாற்றுகின்றது.



Scanned with CamScanner

எதிர்காலத்தில் ஆட்சியாளர்கள் கைக்கொள்ள வேண்டிய பண்புகளை மற்றொரு பாடல்வழி வசிட்டர் இராமனுக்கு உணர்த்துகின்றார்.

> வையம் மன்னுயிர் ஆக அம் மன்உயிர்
> உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு
> ஐயம் இன்றி, அறம் கடவாது, அருள்
> மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ
> (மந்தரை சூழ்ச்சிப்படலம்-25)

இப்பாடலில் எதிர்கால ஆட்சி ஐயமில்லாமல் தெளிவுடையதாக இருக்க வேண்டும் என்கிறார். அவ்வாறாயின் ஆட்சிக்கு வருபவர்கள் அவர்களின் வழி எந்தக் குடிமகனுக்கும் ஐயத்தைத் தராத வகையிலும், ஆட்சியாளரின் ஆட்சிமுறையில் எவ்வித சந்தேகத் தன்மையும் இல்லாமல் இருத்தலாகும் அறத்தைக் கடக்காமல், உண்மையில் நின்று செய்யும் ஆட்சியே எதிர்காலத்தில் வேண்டப்படுவது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்த பாடல்களில் அரசனுக்கு வேண்டிய குணங்களைப் பட்டியலிடும் வசிட்டர் இன்னும் பல செய்திகளைத் தொடர்ந்து அடுக்குகிறார். பொன்னை நிறுக்கும் தாராசின் இயல்பினைப் போல நடுவுநிலைமையோடு ஆட்சியாளன் அமையவேண்டும். அமைச்சரும், சான்றோரும் சொல்லிய முறையில் அவன் ஆட்சி நடத்தவேண்டும்

மங்கையரால் வரும் காமத்தை அரசியலாளர்கள் துறக்கவேண்டும் என்பதும் இங்கு வசிட்டரால் வைக்கப்படும் வேண்டுகோளாகும். இவற்றையெல்லாம் தாண்டி போர் அற்ற எதிர்கால இன்பக் கனவுலகைக் கம்பர் இங்கு காண விழைகின்றார்.

> யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்,
> போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது; தன்
> தார் ஒடுங்கல் செல்லாது; அது தந்தபின்,
> வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ?
> (மந்தரை சூழ்ச்சிப்படலம்-21)

என்ற இப்பாடல் இன்றுவரை எதிர்காலவியலை உணர்த்தும் பாதையாகவே அமைந்துள்ளது. வசிட்டர் இராமனுக்குச் சொன்ன இவ்வுரைகள் எதிர்காலத்தில் யார் ஆட்சியாளர்களாக வந்தாலும் ஏற்று நடக்கவேண்டிய நல்லுரைகள் ஆகும்.

**இராமன் வழியில் கம்பர் காட்டும் ஆட்சிமுறை**

இராமன் சுக்கிரீவனுக்கும், வீடணனுக்கும் அவர்களின் ஆட்சிக்காலத்தில் மக்களும், சமுதாயமும் நடக்க வேண்டிய முறைகளை அவர்களின் முடிபுனையும் காலத்தில் எடுத்துரைக்கின்றான். இவற்றைத் தொகுத்துக் காணுகையில் இவை கம்பரின் எதிர்காலச் சிந்தனைகளை எடுத்துரைப்பதாக உள்ளன.

அரசன் தன் சுற்றத்தோடு இயைந்து நடக்க வேண்டியமுறையை இராமன் 'சேய்மையோடு அணிமை' என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்கிறான். அதாவது அரசியல் சுற்றத்தை மிக நெருங்காமலும், மிக அணுகாமலும் இருக்க வேண்டும் என்ற அரசியல் நடைமுறை இங்குக் கற்றுத்தரப்படுகின்றது.

மேலும், அரசியல் வல்ல அமைச்சர்கள் சொல்லும் சொற்களை ஏற்று அவர்கள் காட்டும் வழியில் ஏற்று ஆட்சி நடத்தவேண்டும் என்பது இராமனின் அறிவுரை அமைகின்றது. மேலும் சமுதாயம் என்பது மூவகையினரை உடையது என்கிறான் இராமன். நண்பர், அயலார், விரவார் என்போர் அம்மூவர் ஆவர். எதிர்கால சமுதாயத்தினைப் பற்றிய இக்கருத்து. இதில் எதிரிகள் இல்லாமல் இருப்பது குறிக்கப்படுகிறது.

எதிர்காலச் சமுதாயம் எளியோர்களைத் துன்பப்படுத்தும் சமுதாயமாக இருந்துவிடக்கூடாது என்பது கம்பரின் எண்ணம்.

> "சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல் மற்று, இந்
> நெறி இகழ்ந்து, யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு,
> குறியது ஆம் மேனி ஆய கூனியால், குவவுத் தோளாய்!
> வெறியன எய்தி, நொய்தின் வெந் துயர்க் கடலின் வீழ்ந்தேன்." (அரசியல்படலம், 417)

என்ற இந்தப் பாடலில் நலிந்தோர்க்கும் நல்லரசாக எதிர்கால அரசுஅமைய வேண்டும் என்ற எண்ணத்தைக் கம்பர் பதிவுசெய்கிறார்.



Scanned with CamScanner

குறிப்பாக இங்கும் மங்கையர் பொருட்டால் மரணம் எய்தும் என்று மகளிர்க்குத் துன்பம் தராத அரசாக எதிர்கால அரசுஅமைய வேண்டும் என்று கம்பர் விரும்புகின்றார். எதிர்கால சமுதாயத்தில் பாதுகாக்கத்தக்கவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், தீயவரை அறத்தின் வழியில் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்ற நெறிகளையும் பின்பற்ற இராமன் வாயிலாகக் கம்பர் வேண்டுகின்றார். அறத்தின் வழி அரசு நிலவ வேண்டும் என்பதும் கம்பரின் எதிர்கால அரசியல் நெறிகளுள் ஒன்று. இவற்றைத் தொகுத்துக் காணுகையில் தற்காலத்தில் நடக்கும் சமுதாயக் கேடுகள் அவற்றைத் தீர்க்கும் முறைகள் ஆகியனவற்றைக் கம்பர் எதிர்கால நோக்கில் தன் இலக்கியத்தில் சிந்தித்திருப்பது தெரியவருகின்றது.

வீடணனுக்கு முடி சூட்டப்படும் காலத்தில் அவனிடத்தில் ஓரிரு செய்திகளைப் பகிர்ந்து கொள்வதற்கு மட்டுமே இராமனுக்கு நேரம் வாய்க்கின்றது.

“இனிது இருத்தி, இலங்கைச்செல்வம் நின்னதே” என்று சிற்சில சொற்கள் பேசி இராமன் வீடணனுக்கு எதிர்காலத்தில் அமையப்போகிற அரசை வழங்குகின்றான். இந்த நிகழ்வால் ‘தனித்தனி வாழ்ந்தேம் என்ன ஆர்த்தன உலகில் உள்ள சராசரம் அனைத்தும் அம்மா” (வீடணன் அடைக்கலப்படலம், 140) என்று குறிப்பிடுகின்றார் கம்பர். இதன்வழி எதிர்கால சமுதாயத்தில் தனித்தனியாக உள்ள அத்தனை உயிர்க் குடும்பங்களும் மகிழும்படியான ஆட்சி மலரவேண்டும் என்கின்ற தனது எதிர்கால சிந்தனையைக் கம்பர் புலப்படுத்துகிறார்.

## முடிவுரை

நிகழ்காலச் சூழ்நிலைகள், நடப்புகள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் என்ன நிகழும் என்பதை அறிவியல் அடிப்படையில் கணித்துக் கூறுவதே எதிர்காலவியலாகும். நிகழக்கூடிய எதிர்காலம், நிகழ்வதற்கு வாய்ப்புள்ள எதிர்காலம், தாம் விரும்பும் எதிர்காலம் என்னும் மூன்று வகையில் எதிர்காலவியல் சிந்தனைகள் வளர்ந்து வந்துள்ளன.

எதிர்காலவியல் தமிழுக்குப் புதியதொரு துறையாக அறிமுகமாகி இருப்பினும் எதிர்காலவியல் சிந்தனைகளைப் பண்டைக்கால இலக்கியங்கள் பெற்றிருப்பது, தமிழின் செழுமையையும், பண்டைத்தமிழரின் அறிவுத்திறத்தையும் பறைசாற்றுகின்றது. கம்பர் காலத்தில் எதிர்காலமாக விளங்கிய இந்நிகழ்காலம் சிறப்பாக அமைய, இந்நிகழ்காலக் கொடுமைகள் நீங்கக் கம்பர் பலவாறு சிந்தித்துள்ளார். இந்நிகழ்காலத்திலிருந்தும் இன்னும் பயணிக்க உள்ள எதிர்காலம் வரையிலும் கம்பரின் கருத்துகள் வேண்டற்பாலன. மேலும் செழுமை பெற இத்துறை குறித்த நூல்களும் ஆய்வுகளும் மிகுதியான எண்ணிக்கையில் வெளிவருவது இன்றியமையாததாகிறது.

## சான்றெண் விளக்கங்கள்

1. www.ta.wikipedia.org/ பார்வை : 22.05.2020
2. வே.முத்துலக்குமி, திருக்குறளில் எதிர்காலவியல், ப.13.
3. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழியகராதி, .314.
4. க்ரியா தற்காலத் தமிழகராதி, ப.176.
5. ச.சிவகாமி, தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல், ப.17

## துணைநூற்பட்டியல்


1. சிவகாமி.ச.,தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 2001,
2. க்ரியா தற்காலத் தமிழகராதி, கிரியா வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1992,
3. கதிரைவேற்பிள்ளை. நா., தமிழ்மொழியகராதி, ஆசியன் எஜுகேஷனல் சர்விஸ், புது டெல்லி,
4. முத்துலக்குமி. வே., திருக்குறளில் எதிர்காலவியல், அனிதா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 2006,
5. www.ta.wikipedia.org


௸



Scanned with CamScanner

தொகுதி-9 எண் 1
Vol. 9 No. 1

மார்கழி 2051 - பங்குனி 2052
January - March 2021

ISSN : 2321-0737


| | | | |
|---|---|---|---|
| 1. | கு. ஜெயபிரபா & பொ. இராமநாதன் | திரைப்படப்பாடல்களில் வேளாண்மை | 1-6 |
| 2. | PAUL TITUS J | IMPORTANCE OF LAND REFORMS FOR THE EMPOWERMENT OF DALITS IN CONTEMPORARY TAMIL NADU | 7-14 |
| 3. | ஃ. இராமதிலகம் | சமூகநோக்கில் மினிர் கல் | 15-20 |
| 4. | ப. கோபிகிருஷ்ணன் | அகநானூற்றில் சொல், சொல்லாக்க உத்திகள் | 21-24 |
| 5. | ஜெ. ஜெபா & எஸ். அலெக்ஸ் ஜேக்கப் | பழமொழிகளில் சமுதாய நோக்கு | 25-31 |
| 6. | க.ராமலட்சுமி & ப. கல்பனா | விருந்துணவும் விருந்தோம்பற்பண்பும்-மலைபடுகடாம் நூலை முன்வைத்து | 32-35 |
| 7. | ப. ராஜேஸ்வரி & சே. தெய்வக்கன்னி | வைணவம் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் | 36-40 |
| 8. | பி. ராணி | அறுவகை இலக்கணத்தில் எழுத்ததிகாரத்தின் இயல் வைப்பு முறைகள் | 41-45 |
| 9. | ரா. கோமஸ்வரி | தொல்காப்பிய மூலப்பதிப்பின் தோற்றப்பின்னணி | 46-53 |
| 10. | நா.சிந்து | கலித்தொகையில் முல்லைநிலக் கூறுகள் | 54-59 |
| 11. | வே. ராசாம்பாள் | ஆற்றுப்படையில் வளங்களும் வருணனைகளும் | 60-65 |
| 12. | அ. அருள்மொழி | புறநானூற்றில் வாழ்வியல் நெறிகள் | 66-69 |
| 13. | இரா. சித்ரா | தமிழ் சிறுபத்திரிக்கையில் தீபம் இதழ் | 70-74 |
| 14. | பா. சுடரொளி | குறுந்தொகைப் பாடல்களில் தலைவனின் மன உணர்வு | 75-79 |
| 15. | த. முத்துலெட்சுமி & க. மல்லிகா | ஐங்குறுநூறு காட்டும் வாழ்க்கை நெறி | 80-84 |
| 16. | தா. தரணி & ச. சுமதி | அஞ்ஞாடி நாவலில் பஞ்சமும் அவலநிலையும் | 85-90 |
| 17. | D. UMADEVI | ANALYSIS OF A MYTHICAL CHARACTER "ALLI" IN FEMINIST, FEMALE AND FEMININE PERSPECTIVES | 91-98 |
| 18. | செ. வீரலட்சுமி | தொல்காப்பிய மெய்ப்பாடும் குறுந்தொகை சுட்டும் தாய்மையும் | 99-103 |
| 19. | என்.செல்வி | ஒரு ஜெருசலேம் சிறுகதைகளில் பெண்கள் நிலை | 104-108 |
| 20. | ம. சுரேஷ் & வே. சுந்தரராமன் | சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலித் தகவல்களின் தாக்கம் குறித்த பங்கேற்பு அணுகுமுறை ஆய்வு | 109-113 |
| 21. | நா.இரமேசு & பெ. கண்ணன் | தமிழ் இலக்கிய வரலாற்றில் நாடகங்களின் பங்களிப்பு | 114-121 |
| 22. | இ. ஜெயஸ்ரீ & மா. சண்முகம் | காப்பியங்களில் திருநங்கைகள் | 122-126 |
| 23. | இரா. வேலுசாமி | அஞ்ஞாடி புதினத்தில் அழகியல் | 127-131 |
| 24. | ச. ஆனந்தி | குறுந்தொகையில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் | 132-144 |
| 25. | க.ஜெயகாந்தி & க. இக்பால் | இமையம் அவர்களின் 'நறுமணம்' சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள் | 145-150 |
| 26. | ரா. சங்கரி & இரா. உமாதேவி | தொல்காப்பியம் கூறும் புறப்பொருள் அறநெறிகள் | 151-158 |
| 27. | ந. பிரபாகரன் & செ. நாகூர்கனி | நொய்யலும், நோயும் | 159-162 |
| 28. | ரா. கலைவாணி | நவீனக் கவிதைகளில் வாழ்வியலும் அழகியலும் | 163-166 |
| 29. | கு. கங்காதரன் | திரையிசைப்பாடல்களும் திரைப்பாடினிகளும் | 167-170 |
| 30. | பா. கிருஷ்ணமூர்த்தி & மு. பாண்டி | செவ்விலக்கிய மரபுக் கூறுகள் | 171-177 |
| 31. | இல. மேனகா & பெ. கண்ணன் | பொறுப்பு நாவல் சுட்டும் திருமணச்சடங்குகள் | 178-182 |
| 32. | சே. மேரி & து. மேஷாக் | தமிழ்க் கிறித்தவ நாடகங்கள் காட்டும் மரபு மாற்றம் | 183-187 |
| 33. | ஞா.பெஸ்கி | க.சுதாகரின் 6174 புதினத்தில் அறிவியல் புனைவுகள் | 188-193 |
| 34. | இரா.முரளி கிருட்டினன் | கம்பரின் எதிர்கால்வியல் சிந்தனைகள் | 194-197 |
| 35. | மு. பாரதி | சங்க மாந்தர்களின் இறைவழிபாடும், நம்பிக்கையும் | 198-202 |
| 36. | மு. செந்தில்குமார் | கலைஞரின் நகைச்சுவை உணர்வு | 203-210 |
| 37. | வெ.திருவேணி | சிலப்பதிகாரத்தில் கோப்பெருந்தேவியின் மாண்பு | 211-218 |
| 38. | கு. விமலாரமணி & தே. இந்திரகுமாரி | விந்தனின் கதைப்போக்குகளும் உத்திகளும் | 219-225 |
| 39. | இரா. இராஜா & ம.இளையராஜா | சு. சமுத்திரத்தின் பூ நாகம் (சிறுகதை தொகுப்பு) காட்டும் சமூகம் | 226-229 |
| 40. | எம். பானுமதி | முல்லைத்திணைப் பாடல்களில் விலங்குகள் | 230-235 |
| 41. | S. UMA GOWRI & SUNITHA | THE GROWTH OF BHARATHANATYAM IN TAMILNADU SINCE SANGAM PERIOD | 236-241 |
| 42. | வே.தா.தர்மராஜா | நான்மணிக்கடிகை உணர்த்தும் அறநெறிகள் | 242-248 |
| 43. | பெ. சுமதி | அகநானூறு மருதநில மாந்தர்களின் சுயசிந்தனை வெளிப்பாடு | 249-255 |
| 44. | ஆர். சரவணன் & நீல. மாதவன் | நீதி இலக்கியங்களும் தமிழ்ச்சமுதாயமும் | 256-265 |
| 45. | சா.அனி கரோலின் & ஆ.விஜயலெட்சுமி | சுஜாதாவின் வாழ்வும் படைப்பும் | 266-271 |
| 46. | ஸ்ரீ. அழகுலெட்சுமி & இரா. பழனிச்சாமி | திலகவதி புதினத்தில் உறவுகளால் தோன்றும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் | 272-277 |
| 47. | கா. இரவிச்சந்திரன் | குறியீடும் சங்கேதமும் (SIGN AND CODES): மொழி, வணிகம், தமிழ் மரபு | 278-289 |
| 48. | மு. ஜோதி & டே. கிறிஸ்துமணி | சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலமக்களின் தொழில்களும், நம்பிக்கைகளும் | 290-294 |
| 49. | இரா. அருணா | உளவியல் நோக்கில் கணினி வழி தமிழ் இலக்கணம் கற்றல்-கற்பித்தல் | 295-298 |
| 50. | மா. செல்வகுமார் | தமிழ் இலக்கியங்களில் நதிகள் | 299-302 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner